# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1¼
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 29
13—8—49 சனிக்கிழமை

வீச்சு 50


# திரையை விலக்கிய திருச்சித் திருவிழா

★

## பூஜாமனோபாவம் புலனாகிவிட்டது!

★

"என்னாங்க, திருச்சியிலே ஏதோ திராவிடர் கழக மாநாடு நடக்குதுன்னு நேத்து விடுதலையிலே வந்திருக்குதே, அதிலே யாரோ தலைமை வகிக்கிறாங்கன்னு ஏதோ ஒரு பேரு போட்டிருக்குதே, யாருங்க அவரு?"

"அதுதானே எனக்குந் தெரியல்லே! சாயங்காலம், கடைத் தெருவுக்கா வந்தபோது உங்களைத் தான் கேட்டுத் தெரிஞ்சக்கலாம்னு இருந்தேன், நீங்க என்னடான்னா என்னையே கேக்கிறீங்க!"

"என்னாங்க இது ஒரே ஆச்சரியமா இருக்குது! நீங்க என்னைக் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னு இருந்திங்களா! பெரியாரு, வைக்கம் சத்தியாக்கிரஹம் நடத்தின காலத்திலேருந்து அவரைப் பின்பற்றிவந்திருக்கிறீங்க! உங்களுக்கே தெரியாதவரா மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறாரு!"

"என்னைப் பிரமாதமா சொல்ல வந்துட்டிங்களே நீங்க மட்டும் இன்னாவாம்! செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டிற்குப் போய்வந்த மறுநாளு, நெற்றியிலே இருந்த விபூதியை ஒத்தை விரலாலே அழிச்சிப்போட்டு, அண்ணியிலேருந்து இண்ணிக்கிவரைக்கும் சுயமரியாதைக்காரரா இருக்கிறவர்தானுங்களே நீங்க! நானாவது திராவிடக் கழகத்திலே சாதாரண மெம்பரு! நீங்க இந்த ஊரு திராவிட கழகத்துக்கே தலைவராச்சே! பெரியார் வந்தாக்கூட உங்க வூட்டிலே தானே தங்கற வழக்கம்! உங்களுக்குக்கூட அந்த மாநாட்டுத் தலைவர் யாருன்னு தெரியல்லேன்னா, வேடிக்கையால்ல இருக்குது விஷயம்!"

"வேடிக்கையா, விபரீதமாக இருக்குதுன்னு சொல்லுங்க!"

"விபரீதம் மட்டுமா, வேதனையாகவும்தான் இருக்குது! என்னமோ போங்க, கட்சி கட்சின்னு அலைஞ்சோம்! கடைசியிலே நம்ம தலைமேலே இப்படி கல்லைத் தூக்கிப் போட்டாரு அந்தக் கிழவரு!"

*   *   *

"அடடே, ராமலிங்கமா, வாப்பா வா! எங்கே ரொம்ப நாளா இந்தப் பக்கமே வர்ரதில்லே! B. Com, Hons லே சேர்ந்துட்டியாமே! எப்படிப்பா உனக்கு 'சீட்' கிடைச்சுது!"

"அது இருக்கட்டும் கண்ணப்பா, அது பெரிய இராமாயணம்! யார் யாரையோ புடிச்சி, எவன் எவனையோ கெஞ்சி... எத்தனையோ ரெக்கமெண்டேஷன்! ஆமாம், இன்னிக்கி 'விடுதலை'யைப் பார்த்தியா?"

"விடுதலையா! யாரு விடுதலை? எப்போ? எந்த ஜெயில்லேருந்து?"

"இதோ பார் ராமலிங்கம்! எப்பப் பார்த்தாலும் உனக்கு விளையாட்டுத்தான்! இன்னிக்கி விடுதலையைப் பாத்தியா இல்லையா அதைச் சொல்லுடான்னா சும்மா கதை அளக்கிறியே!"

"ஓ! 'நம்ம' விடுதலையைச் சொல்றியா! நான் பார்க்கலியே! என்ன விசேஷம்!"

"ஏண்டா பாக்கலே! விடுதலையை வாங்கறதே இல்லையா? சாயங்காலம் 4 மணி ஆயிட்டா விடுதலை விடுதலைன்னு அலைவியே பைத்தியம் மாதிரி!"

"அதெல்லாம் அந்தக் காலம்டா! இப்ப அந்தப் பத்திரிகையைத்

# முன்பின் அறியாத "புதுமுகங்கள்" காட்சிதந்த விசித்திரம்!

தொட்டாலே என்னமோ வாயைக் குமட்டற மாதிரி இருக்கு! ஆமாம், என்னமோ விசேஷம் இன்னியே, என்னடா அது?"

"திருச்சியிலே மாநாடாம்! ஜோலார் பேட்டை பார்த்தசாரதி அவர்கள் தலைமை வகிக்கிறாராம்! நாகை விஜயராகவலு திறந்துவைக்கிறாராம்! யாரோ வீரய்யா, நடேசன், எல்லாம் பேசறாங்களாம்!"

"யாரு யாரு! இன்னொரு தடவை சொல்லு! நெடுஞ்செழியன் அன்பழகன் அண்ணாதுரையா பேசறாங்க! ஏதோ, ஏதோ, விடுதலையை காமி!"

"சீச்சீ! நெடுஞ்செழியன் அன்பழகன் இல்லேடா! விஜயராகவலு வீரய்யா, நடேசன்..."

"போதும் நிறுத்துடா! யார்டா அவங்கல்லாம்! திராவிடக் கழகத்திலே புதுசா சேர்ந்திருக்கிறாங்களா என்ன? எந்தக் கட்சியிலேருந்து வந்திருக்காங்களாம்? போட்டிருக்கா விடுதலையிலே?"

"அதெல்லாம் இல்லே ராமலிங்கம், இந்தக் கட்சியிலேயே இருந்தவங்கதானாம், உனக்கு ஒண்ணுமே தெரியல்லியே! திராவிட மாணவர் கழக செயலாளர் நீ?"

"சரிதான் நிறுத்துடா! உனக்கு மாத்திரம் ரொம்ப தெரியுமா அவங்களைப்பத்தி? இல்லை, நான் கேட்கிறேன், இந்தப் பெரிய ஊருலே, யாராவது ஒருத்தருக்குத் தெரியுமா அவங்க யாருன்னுட்டு?"

"பின்ன எதுக்குடா பெரியார் அவங்களைப் புடிச்சிப் போட்டிருக்காரு!"

"வேறெ என்னடா செய்வாரு? ஆலை இல்லா ஊருக்கு, இலுப்பைப்பூ தாண்டா சர்க்கரை!"

* * *

"என்ன மிஸ்டர்? வேகவேகமா பைல்களைப் புரட்டறீங்க! தாலுகா ஆபீசே உங்க தலைமேலேதான் உக்காந்திருக்குது போலிருக்குது?"

"ஓ, ராஜமாணிக்கமா? கவனிக்கவே இல்லியே நான்! நாளைக்கு... ஞாயிற்றுக்கிழமை...மாநாடு! தெரியுமா?"

'தெரியுமே! திருச்சிறைப்பள்ளி சங்கதிதானே சொல்றே! அடா அடா! என்ன அருமையான மாநாடு! எவ்வளவு அற்புதமான பேச்சாளர்கள்! என்னென்ன கழக முக்யஸ்தர்கள் எல்லாம் கலந்து கொள்கிறார்கள்! வீரய்யா 1, நடேசன்—2, விஜயராகவலு—3, சண்முக வேலாயுதம்—4, லட்சுமணய்யா—5! கூத்து! கூத்து!! மாநாடா முருகேகஸ் அது? பெரியார் ஆதரிப்பு நாடகம்!!"

"டே நம்ம பெரியாரை அப்படியெல்லாம் சொல்லாதேடா! எனக்கு கோவம் வரும்? நம்மை சதிகாரனுங்கன்னு சொன்ன பெரியாரு, நம்மை எதிரிங்கன்னு எழுதிய பெரியாரு, நம்மை சுயநலமிகள்னு தாராளமா எழுதின பெரியாரு, அவரைத் திட்டலாமா நாம்? அபசாரம்! அபசாரம்! கன்னத்திலே போட்டுக்கோடா?"

"அவர் என்ன மஹேஸ்வரனா? இல்லை, நான்தான் என்ன வரம் கோரி நிற்கும் பக்தனா கன்னத்தில் போட்டுக்க? அது திருச்சியிலேடா அது, திருச்சி மாநாட்டிலே! பக்தாள் கூடறாங்க அங்கே! அவாள் கிட்டே சொன்னா செய்வாள்!"

"ஏதுடா பிராமணத் தமிழ்கூட கத்துக்கிட்டே!"

"வேறெ என்னடா செய்யறது? எதையும் பகுத்தறிவு கொண்டுதான் ஆலோசிக்கணும்னுசொன்ன வேதாசலம், இப்போ, பகுத்தறிவைத் தள்ளு குப்பையிலே—எதையும் பெரியார் சொன்னபடிதான் சொல்லக் கத்துக்கணும்னு சொல்லிட்டாரே! மானம் போவுதேடா நமக்கு! பிராமணத் தமிழ் கத்துக்கிட்டு, பூணூல் போட்டுக்கிட்டு, பிராமணா ஆயிள்ளாம்னு பார்க்கிறேன்! ஏண்டா எப்படி நம்ம யோசனை!"

"டேய்! மெள்ள பேசுடா! இது ஆபீசு! பக்கத் தறையில் ஒரு குறுக்கு நூல் இருக்குது! அதன் காதிலே விழுந்து தொலைக்கப் போகுது!"

* * *

"சார்! மிஸ்டர் செக்ரட்டரி சார்!"

(வீதிவழியே போகிறவர் திரும்பிப் பார்த்து,) "என்னைங்க, என்னையா கூப்பிட்டீங்க?"

"ஆமாம் சார்! உங்களைத்தான்! நீங்கதானே இந்த ஊர் திராவிடர் கழக செக்ரடரி!"

"ஆமாம் ஆமாம்! நான்தான்! நீங்க......"

"நான், கதர்கடை கண்ணப்ப முதலியார்! உங்க திராவிடர் கழக மாநாடு ஏதோ திருச்சியிலே நடக்குதுன்னு உங்க விடுதலையிலே பார்த்தேன். பேசறவங்க பேரு போட்டிருந்தது—எப்பவுமே நான் கேள்விப்படாதவங்களா இருக்குது! உங்களைக் கேட்டா தெரியும் யார் அவங்க, என்று, அப்படீன்னுதான் கூப்பிட்டேன், மன்னிக்கணும் சார்!'

"எனக்கும் தெரியாது! நானும் கேள்விப்பட்டதில்லே! ஐயோ பாவம், அதுக்கா கூப்பிட்டீங்க!"

* * *

இந்த ஒரு வார காலமாக, தமிழகத்தில், திராவிடர் கழகத் தோழர்கள் உலவும் இடங்களிலெல்லாம் கூடவே உலவிவரும் உரைபாடல் துணுக்குகள் இவை. நாம், வீதி வழியே சென்றபோது, அலுவல் அகங்களை நாடியபோது, நாலாறு பேரைச் சந்தித்தபோது, திராவிடர் கழக வாலிபர்களைக் கண்டபோது, எங்கும், எங்கெங்கும், மேலே தீட்டப்பட்டுள்ளதைப் போன்ற உரையாடல்களே நம் செவிகளை வந்து தாக்கலாயின. இந்த "மாநாட்"டிலே கலந்து கொள்ளும் "பிரமுகர்கள்"(!) யார் என்று நம்மையும் பலர் கேட்டனர்—நாமும் திகைப்பையும் வியப்பையும்தான் பதிலாகக் கூற முடிந்ததே தவிர அவர்கள் யார்—எத்தனை நாட்களாக கட்சியில் இருக்கிறார்கள்—அல்லது புதிதாக வேறு கட்சியிலிருந்து வந்தவர்களா? எந்த ஊர், எந்த மாவட்டம்-எத்தனை ஆண்டுகளாக கட்சியுடன் தொடர்புடையவர்கள் என்பன போன்ற விவரங்களை நம்மாலும் தர முடியவில்லை—தெரிந்தால்தானே தருவதற்கு? நடேசன்-வீரய்யா- விஜயராகவலு—பார்த்தசாரதி— லட்சுமணய்யா—இந்தப் பெயர்களே நமக்குப் புதிது! முன்பின் கேள்விப்படாதவை, இந்தப் பொருந்தாத் திருமணம் மட்டும் நடக்காமல் இருந்திருந்தால் நாம் கேளவிப்பட்டே இருக்க முடியாதவை. ஈரோட்டு மாநாட்டிலே பேசியவர்களல்ல அவர்கள் — "தூத்துக்குடி"யிலே அவர்களைக் கண்டதில்லை—சேலம் மாநாட்டிலே இருந்தவர்களல்ல—சென்னை இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே பங்கெடுத்துக் கொண்டவர்களல்ல—இதுவரை மாவட்டந்தோறும் நடைபெற்றுவந்த கழக மாநாடுகள் எதிலும் அவர்கள் பெயரையும் கேள்விப்பட்டதில்லை நாம்—

(11-ம் பக்கம் பார்க்க)

# பெரியார் இராமசாமி 'புதுக்கடவுள்' ஆகிறார்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடர் கழகத்தில் மிகப் பெரும்பாலோர் பெரியார் போக்கை வெறுத்து ஒதுக்கும் உள்ள உரமும் கொள்கை உறுதியும் படைத்தவர்களாக இருக்கும் காரணத்தால், பெரியாரை ஆதரிக்கும் நிலையிலே இருந்து தீரவேண்டிய சிலர், இது போன்ற தவறான குறுக்கு வழிகளில் சென்றாவது கேலிக்கிடமான தங்கள் போக்கை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று **காட்டுவதற்கு** வேறு வழி ஏதும் கிடையாது என்ற திட்டமான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதன் விளைவுதான் இந்த திருச்சித் "திருவிழா"!

எப்படியோ, எந்தத் தவறான வழியையோ கையாண்டு, மாநாடு என்ற பெயரில், ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டினார்களே "புரட்சி வீரர்கள்", அவர்கள், அந்தக் கூட்டத்தில், பெரியார் செயல் நியாயமானதுதான் என்பதை நிலைநாட்ட, ஏதாவது அறிவுக்குப் பொருத்தமான இரண்டொரு வாதங்களையாவது தந்தார்களா? அதுதான் இல்லை. வருகிறார் வருகிறார் என்று வீரமுரசு கொட்டப்பட்டு விளம்பரம் செய்யப்பட்ட பெரியாரோ திருச்சிக்கு வரவே இல்லை! வந்தவர்களுக்கோ, நல்ல வாதங்கள் ஏதும் கூற வழியேயில்லை! இருந்தால்தானே கூற! சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? சட்டி காலியாக இருக்கும்போது, அகப்பையைப் போட்டுப் போட்டுத் துழாவினால் என்ன வரும்? சட்டிதான் உடையும்!

காலிச் சட்டியில் அகப்பையைப் போட்டுத் துழாவி அள்ளி அள்ளி வைக்கும் (எதை?) மேதாவித்தனமான செயலைத்தான் புரிந்திருக்கிறார்கள் திருச்சிக் கூட்டத்தில் கொடியேற்றிய, திறந்து வைத்த, வரவேற்புரையாற்றிய, தலைமை உரை ஆற்றிய நால்வரும்!

பெரியாரின் பொருந்தாத் திருமணம் நம் கொள்கைகளுக்குப் புறம்பானது—இவ்வண்ணம் கட்சிக் கொள்கையை குப்பைக்குச் சமமாக மதித்த தலைவரை நாம் இனியும் ஏற்றுக்கொள்வது முதல் தரமான மடமை என்கிறோம் நாம். பெரியாரின் தலைமை இனியும் வேண்டும்தான் என்று 'பெரியார் பஜனை' பாடும் திருச்சித் திருவிழாக்காரர்கள், இந்தத் திருமணம் பொருந்தும் திருமணம்தான் என்பதை நிலைநாட்ட ஏதாவது ஒரு ஆதாரத்தைத் தந்தார்களா-இல்லை! தரவில்லை!! எப்படித் தரமுடியும்? 72—30! பொருந்தும் என்று யார்தான் கூறமுடியும்? பகுத்தறிவாளர்கள் எந்த முகம் கொண்டுதான் சொல்லமுடியும்?

திருமண விபரீதத்தைப் பற்றித்தான் அந்தத் திருவிழாக்காரர்கள் ஏதும் விளக்கம் கூறமுடியவில்லையென்றால், பெரியார், "இனி, என் கட்சிக்கு முட்டாள்கள்தான் தேவை—சொந்தப் புத்தி உள்ளவர்களுக்கு இங்கு இடம் கிடையாது" என்று, கட்சியை, ஏதோ, தன் சொந்த சொத்து என்பதாக எண்ணிக்கொண்டு, பேசியும் எழுதியும் வருகிறாரே கட்சியையே அவமானப் படுத்தும் வகையில், அதற்காவது ஏதாவது சமாதானம் கூறினார்களா? இல்லை! அதுவும் இல்லை!

பெரியார் கொள்கையை வீசி எறிந்துவிட்டு திருமணமே சிலாக்யம் என மேற்கொண்டார்—இதற்கும் சமாதானம் இல்லை!

பெரியார் கட்சியையே அவமானப் படுத்துகிறார். கட்சி பகுத்தறிவுப் பணிக்கே லாயக்கற்றது என்கிறார். பகுத்தறிவு உடையவர்களுக்கு கட்சியில் இடமே கிடையாது என்கிறார்—இதற்கும் சமாதானம் இல்லை!

பெரியார் தவறு செய்கிறார்! அதை மறுப்பதற்கு, "மாநாட்"டுக்காரர்களுக்கு வக்கோ வகையோ இல்லை! என்றாலும் பெரியாருக்கு ஜே போடமட்டும் முன் வந்துவிட்டார்கள்.

மன்னிக்கமுடியாத தவறுகளைத்தான் செய்கிறார் பெரியார்—என்றாலும் அவரை வணங்கத்தான் வேண்டும் என்கிறார்கள் "மாநாட்"டு மாவீரர்கள்!

## பெரியார், மற்றொரு கடவுளாகிறார்! பெரியார்பக்தி மற்றொரு மதமாகிறது!!

பெரியார், கொள்கையை மீறினாலும், கட்சியைப் பாழாக்கினாலும், தொண்டர்களை அவமானப் படுத்தினாலும், பகுத்தறிவைக் கேலி செய்தாலும், பெரியாரைக் குறை கூறக்கூடாது, பெரியாரின் தவறுகளைக் கண்டிக்கக் கூடாது, பெரியாரின் ஒழுங்குத் தவறுதலை எடுத்துக் காட்டக்கூடாது என்ற மனப்போக்கு ஏற்பட்டுவிட்டது "மாநாட்"டு மூதறிஞர்களுக்கு! பூஜா மனோபாவம்!! பக்தி சுபாவம்!!

"இதோபாரப்பா தோழா, வேதம் வேதம் என்று பஜிக்கிறாயே, அது புனிதநூல்—பூர்வீகர்கள் தீட்டியது— என்றெல்லாம பூரிப்படைகிறாயே, வேதோபதேசங்களை மோட்ச சாம்ராஜ்ய வழிகாட்டிகள் என்று ஆனந்தப் பண் பாடுகிறாயே, இதோ பார், நீ புனிதச் சுவடி என்று புகழும் வேதத்தில், திராவிடர்களை இழிவுபடுத்தியுள்ள பகுதி! இதோ பார், மது—மது—மது உண்ணலே ஆண்டவனின் திருவடி கமலங்களை அடைவதற்கான மார்க்கம் என்று கூறும் சுலோகம்! இதோ பார், நமமைப் பெற்றெடுத்த மாதர் குலத்தை இழிவுபடுத்தும் பகுதி! இப்படிப்பட்ட இழிவானதோர் சுவடியை புனிதநூல் என்று புகல்கிறாயே—தகுமா?" என்று நாம் கேட்டால், ஆஸ்திக அன்பர்கள், பூசுர குல திலகர்கள், ஆனந்த விகடன்கள், 'நீ சொல்வதெல்லாம் சரி! இருக்கட்டும்! என்றாலும் வேதத்தைக் கண்டிக்கலாமா— ஆண்டவனே தீட்டியதல்லவா அச்சுவடி—கண்டிப்பது மகா பாபம்!'. என்று பதில் கூறுவர். அதைக் கேட்டுவிட்டு, நாம், "பாரய்யா இந்தப் பக்தகோடிகளை! வேதம் தவறுதானாம்! என்றாலும் அதைக் கண்டிக்கக் கூடாதாம்! அப்படிச் செய்வது நாஸ்திகமாம்! வேதமானால் என்ன விவிலியமானால் என்ன, ஆண்டவனே கூறினால் என்ன, அன்னக்காவடிதான் கூறினால் என்ன, பகுத்தறிவுக்கு ஒத்ததைத்தானே ஏற்கமுடியும்—ஒவ்வாததை விலக்கத்தானே வேண்டும்?" என்று எத்தனை ஆயிரம் முறை பொதுக் கூட்டங்களில் வீர முழக்கம் புரிந்திருக்கிறோம்! இப்போது, அதனையெல்லாம் மறந்துவிட்டு, பெரியார் தவறுதான் செய்கிறார், வருத்தமாகத்தான் இருக்கிறது. வேதனையாகக் கூடத்தான் இருக்கிறது, என்றாலும் என்செய்வது—பெரியாரை எதிர்க்கலாமா? பெரியாரைக் கண்டிக்கலாமா என்று கூறுகிறார்களே திருச்சித் தீரர்கள், இதனைக் கேட்டு நாடு நகைக்கிறதே

(6-ம் பக்கம் பார்க்க)

# நடிகக்கலை அறியாதார் ஆடுகின்றனர் நாடகம்!

(12–ம் பக்கத் தொடர்ச்சி)

பாளிகளுமல்ல.)

உண்மையிலேயே, திருச்சியில், சென்ற வாரம், தேவர் மண்டபத்தில், **மாநாடு என்ற பெயரால் நடைபெற்றிருக்கும் கூட்டம்**, பெரியார் அவர்களின் பெரு முயற்சிக்குப் பெரியதோர் தோல்வி என்பதை பெரியார் உட்பட அனைவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அனைவரும் என்கிறபோது, வேண்டிய உண்மை வேண்டாத உண்மை என்ற பாகுபாடு பாராது, எல்லா உண்மைகளையும் ஒப்புக் கொள்ளும் நல்லியல்பு படைத்தோரை மட்டுமேதான் குறிப்பிடுகிறோம்—ஏனையோரை அல்ல!

"மாநாட்"டிற்கு 5000 பேர் வந்திருந்தனர் என்று "விடுதலை" பூரிப்புடன் சொல்லிப் பெருமிதம் அடைகிறது. திருச்சியிலிருந்து நமக்கு வந்திருக்கும் எல்லாத் தகவல்களும், வந்திருந்த கூட்டம் இதைவிட மிக மிகக் குறைவு என்றே தெரிவிக்கின்றன. விடுதலையின் கணக்கு உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், பெரியாரின் தோல்வி இதனால் எந்த விதத்திலும் மறைக்கப்பட்டுவிட மாட்டாது. பெரியாரின் போக்கால் இயக்கத்தில் பெருத்த கொந்தளிப்பும், மனக்கசப்பும், பெரியார் மீது வெறுப்பும் ஏற்பட்டிருக்கிற நேரம் இது. பெரியாரின் விபரீதப் போக்கால் உள்ளம் நொந்து கிடக்கும் ஆயிரமாயிரம் கழகத் தோழர்கள், அவரின் தலைமையில் வேலை செய்ய முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்ட காலம் இது. திராவிடர் கழகத்தின் தலைமை ஆட்சிக் குழுவாகிய மத்தியநிர்வாகக்கமிட்டி விரைவில் கூடி, நம் அனைவரின் நம்பிக்கையையும் இழந்துவிட்ட திரு ஈ. வெ. ரா. அவர்களின்நிரந்தரத் தலைமைப் பதவிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்குத் தயாராக இருக்கும் சமயம் இது. பெரியாரிடமிருந்து விலகிநிற்கும் எண்ணற்ற கழகத் தோழர்களும் பிரபலஸ்தர்களும், தலைவர் மீதுள்ள பாசத்தையும் காதலையும்விடகட்சிக்குசெய்யவேண்டிய கடமையே பெரிது என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருக்கும் காரணத்தால், பெரியார் இந்த இரண்டு மாத காலமாகச் செய்துள்ள குற்றங்கள் இவை இவை—இவற்றின் காரணமாக, அவர் தலைமைப் பதவியை இழக்க வேண்டியது இன்னின்ன விதத்தில் அவசியம் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லி வருகின்றனர் என்றபோதிலும், அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகளில் ஒன்றையாவது சரியானபடி மறுக்க முடியாமல், பெரியாரும் அவரைச் சேர்ந்து நிற்கும் இரண்டொருவரும் திகைத்து நிற்கும் காலம் இது. எனவே இந்த நிலையில், பெரியார், ஒரு மாநாட்டில் பேசுகிறார் என்றால், மக்கள், இயற்கையாகவே, இவ்வளவுக்கும் என்னதான் பதில் கூறுகிறார் அவர்—போய்த்தான் கேட்போமே என்ற ஆவலும் ஆர்வமும் உடையவர்களாய், "மாநாட்"டிற்கு வந்திருக்கத்தான் செய்வார்கள். அது இயற்கை தான். அதிலும் இந்த ஐயாயிரம் பேர் திருச்சி நகரிலிருந்துமட்டும் வந்தவர்களல்ல. திருச்சி ஜில்லா மதுரைஜில்லா தஞ்சை—கோவை—சேலம் ஜில்லாக்கள் ஆகிய ஐந்து ஜில்லாக்களிலிருந்தும் வந்தவர்களாம்—"விடுதலை" கூறுகிறது! இவ்வளவுகொந்தளிப்புள்ள நேரத்தில் ஐந்துஜில்லாக்களையும்சேர்த்து ஒரு ஐயாயிரம் பேர் வந்திருந்தால் அதிலே ஆச்சரியப் படுவதற்கோ பெரியார் களிப்படைவதற்கோ, சரக்கு எங்கே இருக்கிறது? மாநாட்"டிற்கு வந்த இந்த ஐயாயிரம் பேரும் பெரியாரின் இன்றைய போக்கை ஆதரிப்பவர்கள் தான் என்று பெரியாரேகூட கூற மாட்டார்; கூறமுடியாது; கூறுவது பைத்தியக்காரத்தனம். அவர்களில் பெரியாரை ஆதரிப் பவர்களும் சிலர் இருந்திருக்கக் கூடும். அதே போல அவர்தம் போக்கினால் வெறுப்பும் திகைப்பும் அடைந்தவர்களும் இருக்கத்தான் செய்வர். ஆனால் இந்த இரு சாராரையும்விட அவர் மீது சுமத்தப்பட்டுள்ள பொருந்தாத் திருமணம்—சர்வாதிகாரப் போக்கு—கழகத் தோழர்கள் அனைவரையும் அவமானப் படுத்திய கோராமை—யார்மீதும் நம்பிக்கையில்லை என்று கூறிய கொடுமை ஆகியவற்றிற்கு இதுவரை அவர் தக்க பதில் ஏதும் தரவில்லையே, இந்த இடத்திலாவது தருவாரா, தருவதற்கு ஏதேனும் சரக்கு அவரிடம் உண்டா என்பதை நேரில் கண்டறியவேண்டும் என்பதற்காக மண்டபத்திற்கு வந்தவர்களின் தொகையே அதிகமாக இருக்கும். எனவே, அங்கே வந்தவர்கள் எல்லாம் தங்கள் ஆதரவாளர்கள் என்பதாக பெரியாரோ அல்லது "வேதாசலம்—குத்தூசி" குழுவினரோ கனவு காண்பார்களாயின், அந்தக் கனவு வெறும் பகல்கனவே என்பதை நாம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துவிட ஆசைப்படுகிறோம்.

இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலிருந்து இந்த "மாநாட்"டைப்பற்றிக் குறிப்பிட நேரும்போதெல்லாம், நாம், **மாநாடு** என்பதாக வெறுமனே குறிப்பிடாமல், அந்தச் சொல்லின் முன்னும் பின்னும் "  "—இந்த அடையாளக் குறிகளைச் சேர்த்து "**மாநாடு**" என்பதாகவே எழுதி வந்திருக்கிறோம் என்பதை வாசகர்களிற் சிலராவது உற்றுக் கவனித்து, ஏன் இதுபோல எழுதுகிறோம் என்பதைப்பற்றி சிந்திக்கத் தொடங்கியிருக்கவும் கூடும். இப்படி நாம் எழுதுவதற்கு ஏதோ ஒரு முக்கியமான காரணம் இருந்தே தீரும் என்று, அவர்களிற் சிலராவது முடிவுகட்டி யிருப்பர். அப்படியிருந்தால் அந்த முடிவு சரியானது.

நாம் இதுபோல எழுதுவதற்கு முக்கியமான காரணம் உண்டு.

அந்தக் காரணம் இதுதான்:

இந்த "மாநாடு" உண்மையில் மாநாடு அல்ல! மாநாடு என்ற பெயரை, தவறானமுறையில், எதேச்சாதிகாரத்தனமாக, ஒழுங்கு முறைக்கு மாறான வகையில் சூட்டிக்கொண்டு நடந்த ஒரு பொதுக்கூட்டமே இது!

இந்தப் பொதுக்கூட்டத்தை, "விடுதலை", கட்டுப்பாடான முறையில், உண்மைக்கு முற்றிலும் மாறான வகையில் வேண்டுமென்றே, மாநாடு, மாநாடு, என்று எழுதி பொய்ப் பிரசாரம் புரிந்திருக்கிறது.

இந்தப் பொதுக்கூட்டம், திருச்சி ஜில்லா திராவிடர் கழக மாநாடு என்று 'விடுதலை'யால் திரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

**இது தவறு.**

**இது விஷமத்தனம்.**

# முகமூடி கிழிந்த உருவம்! மாநாடு என்ற பெயரில் பொதுக்கூட்டம்!

இது, விடுதலை—குத்தூசியாரின் சொந்த நடையிலே கூறுவதானால், கயிறு திரிக்கும் வேலை.

திருச்சி ஜில்லா திராவிடர் கழக மாநாடு என்பதாக ஒன்று நடைபெறவேயில்லை. அப்படி நடந்ததாகக் கூறப்படுவது, திருச்சி நகரில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டம்! **"இரண்டு அறிவாளிகள் சேர்ந்தால் ஒன்றாய் இருக்கமுடியாது, என் கட்சியில் இனி முட்டாள்களுக்குத்தான் இடமுண்டு"** என்று, பெரியார் அவர்கள் வெளிப்படையாக, கன்னத்தில் அறைந்ததைப்போல தெரிவித்தபிறகும்கூட, மானம் ரோஷம் வெட்கம் இவற்றை மறந்துவிட்ட சில "மகானுபாவர்கள்", பெரியார் அவர்கள் சூட்டிய முட்டாள் பட்டத்தை மனமுவந்து ஏற்றுக்கொண்ட சில "புண்ணிய புருஷர்கள்," அவரை ஆதரிப்பதற்காகக் கூட்டிய ஒரு பொதுக் கூட்டம் தான் நடைபெற்றிருக்கிறது—அதற்குத்தான் ஜில்லா மாநாடு என்ற பட்டம்!!

ஓர் அரசியல் கட்சியின் ஒரு ஜில்லா மாநாடு கூடவேண்டும் என்று சொன்னால், அந்த அரசியல் கட்சியின் அந்த ஜில்லா கிளைச் சங்கம் தன்நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி, அந்தமாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாட்டை, அந்தக் கமிட்டி ஏற்கும்படி செய்யவேண்டும். வேறுவிதமாகக் கூறுவதானால், ஓர் அரசியல் கட்சியின் ஜில்லா மாநாட்டைக் கூட்டும் உரிமை அந்த அரசியல் கட்சியின் அந்த ஜில்லாக் கிளையின் நிர்வாகக் கமிட்டிக்குத்தான் உண்டு.

அந்தக் கமிட்டியைக் கேளாமலோ, அந்தக் கமிட்டியின் சம்மதத்தைப் பெறாமலோ, அந்தக்கமிட்டியால் நடத்தப்படாமலோ, யாராவது சிலர்—அவர்கள் எவ்வளவு செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாய் இருந்தபோதிலும்சரியே—"ஜில்லா மாநாடு கூட்டுகிறோம்" என்று முரசு கொட்டத் தொடங்கினால், அந்த மாநாட்டை ஜில்லா மாநாடு என்று யாரும் கூறமாட்டார்கள். அப்படியே யாராவது கூறினாலும், அதனாலே அது ஜில்லா மாநாடாக ஆகிவிடாது. அது வெறும் பொதுக் கூட்டம்தான்.

திருச்சி ஜில்லா திராவிடர் கழக மாநாடு என்ற பெயரால்இப்போது கூட்டப்பட்டு, விடுதலையிலும் பிரமாதமாக கண்டறியாதன கண்டோம் என்ற முறையில் பக்கம் பக்கமாக விளம்பரமும் செய்யப்பட்டிருக்கும் "மாநாடு" திருச்சி ஜில்லா நிர்வாகக் கமிட்டியின் சம்மதத்தைப் பெற்றதல்ல—அந்த நிர்வாகக் கமிட்டியினரால் கூட்டப்பட்டதுமல்ல. எனவே அதனை ஜில்லா மாநாடு என்று கூறுவது ஜில்லா மாநாடு என்ற சொற்றொடரை அவமானப் படுத்துவதாகவே முடியும்.

உண்மையில் இது ஜில்லா மாநாடாக இருந்திருக்க வேண்டுமானால், திருச்சி ஜில்லா திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி, முறைப்படிகூடி, இப்படி ஒரு மாநாடு நடத்துவது என்று முடிவு செய்திருக்க வேண்டும்.

ஆனால் அதுபோல நிர்வாகக் கமிட்டி கூடவேயில்லை.

கூடி, மாநாடு நடத்துவது என்று முடிவு செய்யவும் இல்லை.

திருச்சி ஜில்லா நிர்வாகக் கமிட்டியில் மொத்தம் இருப்பவர்கள் 20 பேர். இவர்களில் 4 பேர்மட்டும் தனியாகக்கூடி, தங்களுக்கு வேண்டியவர்களும், **ஜில்லாக் கமிட்டி உறுப்பினர்கள் அல்லாதவர்களும் ஜில்லாக் கமிட்டிக்குச் சம்பந்தம் இல்லாதவர்களும் ஆகிய யார்யாரையோ** கூட்டி வைத்துக்கொண்டு, மாநாடு நடத்துவது என்று முடிவு செய்து, அந்தப் பெயரால் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி, நடத்தியிருக்கிறார்கள். நியாயபுத்தியுள்ள யார் தான் இதை மாநாடு என்று அப்படி அழைப்பார்கள்?

**தோழர்கள் A. P. தர்மலிங்கம், இராசா சேரமன், G. பராங்குசம்** ஆகிய மூவரும் திருச்சி ஜில்லா நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள். அவர்கள், இந்த மாநாடு எனப்படும் பொதுக்கூட்டம் நடப்பதற்கு இரண்டுநாட்களுக்கு முன்னதாகவே வெளியிட்டுள்ள கூட்டறிக்கை, இந்த உண்மைகளை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

இதோ, அந்த அறிக்கை:—

வெல்க திராவிடம்!

இலட்சியம் ஓங்குக!!

## திருச்சி மாவட்ட திராவிடர்கழக மாகாண நிர்வாக உறுப்பினர்கள் கூட்டறிக்கை.

**திராவிடர் கழகப் பெரியோர்களே! இளைஞர்களே!!**

திருச்சி மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் 19-வது மாநாடு என்று 7—8—49 அன்று நடைபெற யிருப்பது **மாவட்ட நிர்வாகக் கமிட்டியின் சம்மதம் பெற்றதல்ல.** கமிட்டி உறுப்பினர்கள் அல்லாத பலரைச் சேர்த்துக் கொண்டு தோழர் தி. பொ. வேதாச்சலம் இந்த மாநாட்டைக் கூட்டியிருக்கிறார். இதற்காக வரவழைக்கப்பட்ட பேச்சாளர்களும் இதுவரையில் மக்களுக்கு அறிமுகமாகாத நிலையில் இருந்தவர்கள்.

**திருச்சி மாவட்ட திராவிடர்கழக நிர்வாகக் கமிட்டி என்று தனியாக ஒன்று கூடவில்லை.** இதற்கென்றே வரவழைக்கப்பட்ட கமிட்டி அங்கத்தினர் அல்லாத பலரின் எண்ணிக்கையால் மாநாடு கூட்டப்படுகிறது. மாவட்ட நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் மொத்தம் இருபது பேரில் மாநாடு நடத்துவதை ஆதரித்தவர்கள் வந்திருந்த நான்கே தோழர்கள் தான். அப்படியிருக்க இந்த மாநாடு எப்படி மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது?

7—8—49 அன்று நடைபெறும் மாநாடு திருச்சி மாவட்ட பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல. அதில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் இந்த மாவட்டத்தை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. தோழர் வேதாச்சலத்தின் **ஏதேச்சாதிகாரத்தை** இதன் மூலம் கண்டிக்கிறோம்.

A. P. **தர்மலிங்கம்,** R. **இராசா (சேரமன்).** G. **பராங்குசம்.**

5—8—49

(மாகாண நிர்வாக உறுப்பினர்கள்)

(10-ம் பக்கம் பார்க்க)

# நன்றாகச் சொன்னீரய்யா, மிக நன்றாகச் சொன்னீர்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

**அந்தக் கேலிச் சிரிப்பு கூடவா அவர்கள் காதில் விழவில்லை?**

ஆண்டவனே தவறு செய்தாலும் கண்டிப்போம் என்றவர்கள் பெரியார் தவறு செய்தபோது மட்டும் கண்டிக்க முடியாது என்கிறார்களே! இது என்ன விபரீதம்? ஏன் இந்தக் கோலம்? எதற்காக இந்த பூஜா மனோபாவம்?

ஆண்டவனைக் கண்டிப்பதற்கு மட்டும்தான் நம் பகுத்தறிவு பயன்பட வேண்டும்—பெரியாரைக் கண்டிப்பதற்கு அல்ல என்றால், ஆண்டவனை சிம்மாசனத்திலிருந்து உருட்டித் தள்ளிவிட்டு அவர் இருக்கும் இடத்தில், இவர்கள் பெரியாரை உட்கார வைக்கிறார்கள் என்றல்லவா பொருள்? சரியா இது? முறையா? நடக்குமா? நடந்தாலும் நாட்டு நலத்துக்கு உகந்ததா?

பகுத்தறிவு என்ற புயலுக்கு எதிராக ஆண்டவனே நிலைக்க முடியவில்லையே! பெரியார் மட்டும் நிலைக்கமுடியும் என்று நம்புகிறார்களா?

"திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே நேரில் வந்தியம்பிய நல்லதோர் புராணமா இது—இருந்தாலென்ன — பகுத்தறிவுத் தீயிலே போட்டுப் பார். தப்பி நின்றால் ஏற்றுக்கொள் — இல்லையேல் ஒதுக்கு குப்பையிலே" என்று துணிந்து கூறும் அளவுக்கு அறிவுத் தெளிவை நாட்டு மக்களுக்கு ஊட்டியவர்கள் நாம் தானே? இன்று நம்மிலே ஒரு சிலர், "பெரியார் சொல்வதை மட்டும் பகுத்தறிவுக்கண் கொண்டு ஆராயாதே—கண்ணை மூடிக்கொண்டு நம்பு" என்று கூறினால், அதைவிடப் பித்தலாட்டம், பேதமை, மடமை வேறு இருக்க முடியுமா?

நம்பவே முடியவில்லையே சுயமரியாதைக்காரர்களில் சிலர் திருச்சிக் கூட்டத்தில் இதுபோலப் "பக்தர் மொழி" பேசினார்கள் என்பதை!

நினைத்துப் பார்த்தால் நம் நெஞ்சு பதைக்கிறதே! நம் தோழர்களாயிருந்த சிலர், சீர்திருத்தம் பேசியவர்கள், பகுத்தறிவு பகுத்தறிவு என்று முழக்கமிட்டவர்கள், பெரியாருக்காக, பகுத்தறிவுக் கொள்கையைத் தத்தம் செய்யமுன் வந்ததை எண்ணினால் நம் மனம் திடுக்கிடுகிறதே!

"பகுத்தறிவுவாதிகளுக்கு இனி என் கட்சியில் இடமில்லை—கடுகளவு சொந்தப் புத்தியைப் பயன்படுத்துபவர்களுக்கும் இங்கே இடமில்லை—முட்டாள்கள்தான் இனித் தேவை" என்று தைரியமாக எழுதுகிறார் திரு ஈ வெ. ரா. அவர்கள், அதை மறுத்து, எதிர்த்து, தாக்கி, ஒரு வார்த்தை கூடப்பேசவில்லையே திருச்சியில் கூடிப் பேசிய பார்த்தசாரதி—நடேசன்—வீரய்யா—எம். ஆர். ராதா—வேதாசலம் கோஷ்டியினர்?

பெரியார் என்ன சங்கராச்சாரியா? நாம்தான் என்ன பக்த கோடிகளா? சங்கராச்சாரிகள்கூட இந்த 1949ல் பேசத் துணியாத மூட நம்பிக்கை வார்த்தைகளைப் பெரியார் பேசுகிறார்—எழுதவும் செய்கிறார்—ஏன் அதைக் கண்டிக்காமல் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள் இந்த வேதாசலங்கள்!

பகுத்தறிவு உணர்ச்சி நமக்கென்ன மரத்தா போய்விட்டது?

திருச்சி "மாநாட்"டிலே, தெளிவாகவே பேசியிருக்கிறார்கள், இயக்கத்தைவிட, கொள்கையைவிட, பெரியார்தான் முக்கியம் என்று!

இயக்கத்தைவிட பெரியார் முக்கியம்!! எவ்வளவு பயங்கரமான வாதம்! நாம் நாளும் நாளும் கண்டித்துவரும் பாசிசப் பாதையின் கைகாட்டிமரம் அல்லவா இந்த வாதம்? ஹிட்லர் கையாண்ட பேச்சல்லவா இது? வெட்கமில்லையா நம் தோழர்களுக்கு இதைக் கையாள?

நாம் இட்டுக் கட்டிக் கூறவில்லை, கற்பனையல்ல-நம் கைச்சரக்கல்ல, திருச்சி "மாநாட்"டுக்குத் தலைமை தாங்கிய தோழர் ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, அவர்தம் தலைமையுரையில் வெளிப் படையாகப் பேசியிருக்கிறார் இயக்கத்தைவிட பெரியாரும் அவர் உழைப்பும்தான் முக்கியம் என்று!

நம்ப முடியவில்லையா?—முடியாததுதான்! ஆனால் இதுபோல்பேசியிருக்கிறார் பார்த்தசாரதியார்! அது உண்மை!

இதோ அவருடைய "பொன்மொழி!":—

**"நமக்கு நம் இயக்கம் பெரியது. அதைவிடப் பெரியது நம் கொள்கைகள்.**

**அதைவிடப் பெரியது பெரியாரின் இடைவிடா உழைப்பும் நிர்வாகத் திறமையும்."**

இந்த வாக்கியங்களிலே இரண்டு கருத்துக்கள் உள்ளன—ஒன்று, தென்றல்போல் குளிர்ச்சி நிறைந்தது! நம் உள்ளத்தை மகிழ்விப்பது. மற்றதோ........! எட்டிபோல் கசப்பு நிறைந்தது—ஜனநாயகவாதிகள் எல்லோருடைய மனதையும் வேதனை அடையச் செய்வது.

பார்த்தசாரதியாரின் முதல் கருத்து, நம் இயக்கத்தைவிட கொள்கைகளே பெரியவை என்பது. இது முற்றிலும் நியாயமான கருத்து. இதனையாரும் ஆட்சேபிக்க முடியாது.

தோழர் பார்த்தசாரதியார் தரும் இரண்டாவது கருத்து, நம் கொள்கைகளைவிடப் பெரியவை பெரியாரின் உழைப்பும் திறமையும் என்பது! நம் கொள்கைகளை இழப்பதா—அல்லது பெரியாரை இழப்பதா—எதை இழப்பது என்ற பிரச்சினை வருமானால், கொள்கைகளைத்தான் இழக்கவேண்டும்—பெரியாரை அல்ல, என்பதே இதன் பொருளாகும்.

கொள்கைகளைவிடப் பெரியாரே முக்கியம்—இதுதான் இந்த வாசகத்தின் உள்ளுறை.

**கட்சி-கொள்கை- இரண்டையும் விட பெரியாரே முக்கியம்!** சபாஷ்! சரியான சாட்டையடி பெரியாரை எதிர்க்கும் "சுயநலமி'களுக்கு! அப்படிப் பேசும் ஜோலார் பேட்டையாரே, அப்படிப் பேசும்!! கொள்கை கொள்கை என்று கதறுகின்றன "விலகி நிற்கும் விசித்திரங்கள்", அதுகளுக்கென்ன தெரியும் "கொள்கை எப்படிப் போனால் என்ன, பெரியார் புகழுடன் வாழ்ந்தால் போதும்" என்ற அரிய சித்தாந்தத்தின் தத்துவம்! சுத்த மண்டுகள்! கொள்கை முக்கியமாம் கொள்கை!! பெரியார் அல்லவா முக்கியம்!! எந்தக் கொள்கை எந்தக் காற்றிலே பறந்தாலென்ன? பெரியார் வாழ்க என்ற கோஷம் அல்லவா முக்கியம்! நன்றாகச் சொன்னீரய்யா ஜோலார் பேட்டையாரே, மிக நன்றாகச் சொன்னீர்! திருச்சியிலே மட்டும் சொன்னால் போதாது இதை, திக்

# நற்பணி ஆற்றினார் நண்பர் ஜோலார்பேட்டையார்!

கெட்டும் சென்று, தமிழ்நாடெங்கும் கூறும்! இல்லை இல்லை உலகெங்கும் சென்று எல்லா நாடுகளிலும் கூறும்! ஒரு கொள்கையை விட ஒரு தனி மனிதரின் புகழ் தான் பெரிது என்ற இந்த அரிய தத்துவம் அவசியம் தெரிந்தாக வேண்டும் உலகத்திற்கு! கட்சியாம்! கொள்கையாம்!! புடலங்காய்! தலைவர்தான் பெரியவர் இந்த இரண்டையும் விட! அருமை! அருமை!!

* * * *

ஜோலார்பேட்டை நண்பர் பார்த்தசாரதி அவர்களின் தலைமையுரை விடுதலை வெளியூர் 10-8-49 இதழில் வெளிவந்திருக்கிறது-அதிலேதான் இருக்கிறது இந்த அபூர்வ சிந்தாமணி! பக்கம் 3, பத்தி 6, 2 வது பாரா, வரி 4, 5, 6, 7, 8. சென்ற இரண்டு மாத காலமாக விடுதலையை வாங்குவதை நிறுத்திவிட்ட நண்பர்கள் கூட, இந்த ஆகஸ்டு 10ம் தேதி விடுதலையை அவசியம் பார்த்தாக வேண்டும்! யாரோ "பொய்க் கடிதம்" எழுதிவிட்டார்களென்று ஒரு போட்டோ வந்திருந்ததல்லவா, அந்தப் போட்டோவுக்குப் பக்கத்திலேதான் இருக்கிறது, இந்த நிஜமான வாசகம். இந்த வாசகத்தைக் கூட, நாளை மறுநாள், "யாரோ "எதிரிகள்", ஏன் விடுதலையில் தந்திரமாக நுழைத்துவிட்டார்கள்" என்று பெரியார் கூறினாலும் கூறுவார். ஆனால் ஜோலார்பேட்டையார் அப்படிக் கூறமாட்டார் என்று நம்புகிறோம்.

என்னென்னவோ சப்பைக் காரணங்களைக் காட்டி, ஏதேதோ குற்றச்சாட்டுகளை நம்மீது வீசி, அர்த்தமற்ற பல வசைச் சொற்களைத் தூவி, சுயநலமி—விஷமி என்றெல்லாம் ஏசி, என்னென்ன வித்தைகளையோ கையாண்டு பார்த்துவிட்டு, கடைசி கடைசியாக, உண்மையை உரைத்தே தீரவேண்டிய நெருக்கடியான கட்டத்தில் சிக்கிக்கொண்டு உண்மையைக் கக்கியும் விட்டார்கள் "பெரியார் பக்தர்கள்"! எது எப்படிப் போனாலும் இதை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும்! நிச்சயமாக!!

ரெரியாரின் சமீபகால மகத்தான தவறுகள் குருடரும் காணக்கூடிய அளவுக்குத் தெளிவாகத் தெரிகிறதே அதனை நாமெல்லோரும் செவிடரும் கேட்டறியக் கூடிய அளவுக்கு வலியுறுத்திச் சொல்லியும் ஆகிவிட்டதே, என்றாலும் கூட இன்னமும் சிற்சிலர்— அங்கொருவர் இங்கொருவர்—கல்லூரிப் படிப்பும் உலக வரலாற்று அறிவும் உடையவர்கள்கூட இரண்டொருவர் திரு ஈ. வெ. ரா. அவர்களை ஆதரிக்கும் போக்கு உடையவர்களாக இருக்கிறார்களே, இது ஏன் என்பது பற்றி பலமுறை நாம் எண்ணித் திகைத்ததுண்டு. அந்தத் திகைப்பைப் போக்கிவிட்டார் ஜோலார்பேட்டையார் தம் "தலைமையுரை" மூலம்! ஆம்! உண்மை புலனாகிவிட்டது—இச் சிலர்-இவர்களின் தொகை மிக மிகக் குறைவு-இச் சிலர் பெரியாரை ஆதரித்துப் போர்முரசு கொட்டுவதற்குக் காரணம், பூஜாமனோபாவம்! காந்தியார் அவர்கள் எதைச் செய்தாலும் அது புண்ணிய காரியம், அவர் எதைச் சொன்னாலும் அது தேவவாக்கு, குறை கூறுவது பாபம் என்று கண்ணை மூடிக்கொண்டு அவரைப், பின்பற்றியவர்கள்— அல்ல அல்ல! பின்பற்றியவர்கள் அல்ல! தொழுதுவந்தவர்கள்-பின்பற்றுவதற்குக் கண்ணை மூடிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏது? தொழுகைக்குத்தானே கண்மூடி நிற்கவேண்டும்-எப்படி காங்கிரசிலே ஏராளமாக இருந்துவந்தார்களோ, அதுபோல, இங்கே, நம் கழகத்திலும் சிலர், பெரியார் எதைச் சொன்னாலும் அதுதான் சரி என்று கூறி அவரைத் தொழுதுவணங்கிடும் போக்குக் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்- அந்தச் 'சிலர்'தான் பெரியாரை ஆதரிக்கும் சிறு குழுவிலே உள்ள மிகச் சில தூய்மையாளர்கள்!

அவர்கள் கொள்கையைவிட பெரியாரே முக்கியம் என்று கருதுகிறார்கள்! பெரியாரைப் பூஜைக்குரிய பொருளாகக் கருதுகிறார்கள்! அவர் எதைச் செய்தாலும் ஆதரிப்பார்கள், எனவே இத் திருமணத்தையும் ஆதரிக்கிறார்கள். ஆண்டவன் செய்ததாக எதைச் சொன்னாலும்-அது எவ்வளவு அர்த்தமற்றதாகவும் அறிவுக்குப் பொருத்தமற்றதாகவும் இருந்தாலும் அதை ஆதரிப்பதில்லையா பக்தர்கள் அது போன்ற முறையில், அது போன்ற முறையில் என்பானேன், அதே முறையில், பெரியாரை ஆதரிப்பவர்கள்!

இந்த உண்மையை ஏதேதோ வார்த்தைகள் எனும் திரையைக் கொண்டு மறைத்து வந்தார்கள் இது வரை!, திருச்சித் திருவிழா, இந்தத் திரையை நீக்கி விட்டது. தலைவர் பெரியாரை சில ஜோலார் பேட்டையார்கள் ஆதரிப்பதற்குக் காரணம் பூஜாமனோபாவம்தான் என்னும் உண்மையை உணர்த்தி விட்டது, திருச்சியில் சென்ற வாரம் நடைபெற்ற "மாநாடு"! மாநாடா, அல்ல, பொதுக் கூட்டம்! பொதுக் கூட்டமா, அது கூடச் சரியல்ல, பக்தர்கள் தங்கள் "ஆண்டவ"னைத் தொழுது வணங்கிடும் சம்பவத்திற்குப் பொதுக் கூட்டம் என்று பெயரிடுவது அந்தச் சொல்லுக்கே இழுக்கு! திருவிழா (உற்சவம்) என்றுகூறுவோம்! அதுதான் சரி! திருச்சித் திருவிழாவில்கூட, பிறர் இந்த உண்மையைச் சொல்ல அஞ்சி; வேறு ஏதேதோ மழுப்பல் உரைகளைமுணுமுணுத்திருக்கிறார்கள். ஆனால்தோழர்ஜோலார்பேட்டை பார்த்தசாரதிஅவர்கள்தான் துணிந்து, தைரியமாக உண்மையை மறைத்துவந்த திரையை விலக்கியிருக்கிறார்—நம் நன்றி அவருக்கு! கொள்கையை அல்ல பெரியாரை ஆதரிப்பவர்கள் அவர்கள்! கொள்கைக்கும் பெரியாருக்கும் முரண் இல்லாவிட்டால் இரண்டையும்; முரண் இருந்தால், பெரியாரை அல்ல—கொள்கையை, ஆதரிப்பவர்கள் நாம். இதனை உலகுக்கு உணர்த்தினார் பார்த்தசாரதியார்—அவர் தொண்டு வெல்க!!

# புரட்சிவீரர் புறமுதுகிட்டார்!

## தூய உள்ளத்தவர் துடிதுடிக்கின்றனர்!

### காரைக்குடி "குமரன்" கருத்து

முருகப்பா—மரகதவல்லி தமபதிகள் முன்னாளில் தன்மான இயக்கத்தில் ஆற்றிய அரும்பணியை பழம்பெரும் சுயமரியாதைக்காரர்கள் அனைவரும் நன்கறிவர். திரு. ஈ. வெ. ரா. அவர்களின் திருமணப் புதுமையைக் குறித்து, அத் தம்பதிகள் தங்கள் திங்கள் இதழாகிய "குமர"னில் தீட்டியுள்ள தலையங்கத்தின் சில பகுதிகள் :—

பெரியார் காங்கிரஸிலிருக்கும் போது பிறரிடம் கொண்டிருந்த நம்பிக்கை மிகப் பெரிது. உயிருக்குயிரான நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும், தியாக மூர்த்திகளென்று நம்பப்பட்டவர்களும் ஜாதிப்பித்தில் திரும்பிவிட்டார்களென்றதை யறிய மனமொடிந்து போனார் நாயக்கர். பிறகு எவரையும் அவரால் நம்பமுடியவில்லை. உலக மக்கள் எல்லாருமே சமயத்தில் புரட்டர்தான்; தியாகமெல்லாம் வேஷந்தான்; சுயநலந்தான் மனித இயல்பு, என்ற தீர்க்கமான முடிவுக்கு அவர் வந்துவிட்டார்! இதை அடிப்படையாக வைத்து அவருடைய இயக்கத்திலுள்ள எவரையும் தலைதூக்க விடாமல் அடித்துவந்தார். ஒரு நீர் மட்டம்! அதற்கு மேல் எவருடைய தலையும் மேலே தெரியமுடியாது. ஆகையால் தான் அவர் ஏக தலைவராக இருக்க முடிந்தது. இதனால்தான் மற்ற இயக்கங்களில் ஏற்பட்டிருப்பதைப்போல் இந்த இயக்கத்தில் நாயக்கரையடுத்துப் பல தலைவர்கள் தோன்ற முடியவில்லை. நாயக்கருக்கு ஒழுங்கான வேலைத்திட்டமுறை ஒத்துவருவதில்லை.

அவரைப் பின் பற்றியவர்களில் பலர் வெளியே போனார்கள். பலர் பொறுத்துக் கொண்டு உடனிருந்து வந்தார்கள்.

நாயக்கர் கல்யாணம் செய்து கொள்கிறார் என்றதும் ஜனங்கள் அதை ஒரு விகடமாகவே கருதினர்.

பெண் சம்மதித்தால், மணமகனுக்குப் பெண்ணை யாளும் சக்தி 72 வயதானாலும் குறையாதிருந்தால் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்ற வாதத்தை யெடுத்துப் பேச இப்பொழுதும் ஆட்கள் சீர்திருத்தக் கட்சியில் இருப்பதறிய வருந்துகிறோம்.

சாதாரணமான ஒரு மனிதன் நடத்தையால் சம்பந்தப்பட்ட இரண்டொருவருக்குத்தான் சாதக பாதக மேற்படுகிறது. ஆனால் பெயர் விளம்பரப்படுத்தப்பட்ட தலைவர்கள் விஷயம் அப்படி எளிதில் போகிறதில்லை. அதிலும் சமூகப்புரட்சி வீரர்கள் புறமுதுகிடும்போது நிலைமை தலைகீழாகிப் போர்க்களமே அமளிப்பட்டு அரசழிந்து போய்விடும். இந்த உண்மை நாயக்கருக்குத் தெரியாதென்று சொல்லமுடியாது. சுயநலம் இதை மறைத்துவிட்டதென்று சொல்வது அவரை கௌரவப் படுத்துவதாகாது. என்றாலும் நிலைமை அப்படித்தானாகிவிட்டது.

தன் சொத்துக்கு வார்சு வேண்டுமென்பது மகா மட்ட மான அபிப்பிராயமாகும். என்ன சொத்து? எவ்வளவ சொத்து? எதற்காக சொத்து? மனிதன் ஏற்படுத்துகிற வார்சு எத்தனை நாளைக்கு நிலைக்கமுடியும்? சேர சோழ பாண்டியர், நாயக்கர்கள், முஸ்லிம் மன்னர்க ளெல்லாரும் அளவற்ற சொத் தும் அதற்கு வார்சும் உண்டாக் கினார்கள்! எத்தனை நாள் நின் றது?

நாயக்கருக்கு மணியம்மை வார்சு. மணியம்மைக்குப் பிறகு அவருக்குப் பிறக்கும் பிள்ளை வார்சு, அப்பால் பிள்ளையின் பிள்ளை! வருந்துகிறோம்; மிகவும் வருந்துகிறோம். தன் கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், நல்ல இயக்கமானாலும், கெட்ட இயக்கமானாலும் பொதுஜன இயக்கத் தலைவர் ஒருவர்—நாற்பதாண்டு இயக்கத்தில் தலைமை வகித்த ஒருவர்— இந்நிலையை அடைவது பொது இயக்கத் தலைமைப் பதவிக்கே ஏற்பட்ட ஒரு பலத்த அடியா கும்! இயக்கங்களைப் பின்பற் றும் பொது மக்களின் நம்பிக் கையில் வீழ்ந்த பேரிடியுமாகும் இந்த மாதிரிச் செயல்களா லேயே பெரியார் சிறியாரா நேர்கிறது. "குன்றின் அனையா ரும் குன்றுவர்; குன்றுவ, குன்றி அனைய செயின்" இது அறநூல் லுள்ள ஒரு குறள்! சுத்தமான பச்சிளம் பாலுள்ளமுடையவ கள்-உலகிலுள்ள பொய் புரட் அநீதி துயரம் ஆகியவற்றை கண்டு சகிக்கமுடியாத இரக்கப் படைத்தவர் பலர் இவ்வியக்கத் தில் உள்ளனர். இந்த இளை

...ர்கள் எதிர்பாராத இந்த விபரீதத்தைக் கண்டு வெதும்பித் துன்புற்றுத் திகைக்கின்றனர். இங்கிலையில் நாயக்கர் சொந்த விஷயத்திற்குத் திரும்பிச் செல்கின்றார். பொது வாழ்விற் புறமுதுகு காட்டித் தனிவாழ்வு வாழப்போகும் அவர் வார்சு பெருக்கி வழிவழி வாழ்வாராக.

★

"பிரசண்ட விகடன்" காங்கிரஸ் ஏடுதான் என்றபோதிலும், முற்போக்குக் கருத்துக்களை ஆதரிப்பதில், ஆளவந்தார்களின் ஆணவச் செயல்களை இடித்துக் காட்டுவதில், இராவண காவியத் தடை முதலிய அதிகார மமதைகளை மட்டந் தட்டுவதில் நம்முடன் பெரிதும் ஒத்துழைத்திருக்கும் பத்திரிகை. பார்ப்பனரல்லாத சமுதாயத்தின் நன்மைக்கு ஆபத்து வந்த பல சமயங்களில் நம்முடன் கைகுலுக்கி நின்று, பொது எதிரியுடன் போராட அந்த ஏடு தவறியதில்லை. இத்தகு ஏடு, பெரியார் திருமணத்தின் பின் விளைவு குறித்துப்பின் வருமாறு எழுதியிருக்கிறது :—

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமியின் திருமணம், கழகத்தோழர்களுக்கிடையில் பெரிய ஏமாற்றத்தையும் மனக்கசப்பையும் கொடுத்திருக்கிறது. இது பற்றி ஆலோசிக்க திருச்சியில் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் ஒன்றும் நடை பெற்றிருக்கிறது. இக்கூட்டத்திற்கு ஏறக்குறைய முக்கியமான நிர்வாகக் குழு அங்கத்தினர்கள் அனைவரும் வந்திருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். இக்கூட்டத்தில் பெரியார் திருமணம் செய்வதிலிருந்து அவரைத்தடுக்கவேண்டி, ஒரு தூதுக் குழு அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்ட கொஞ்ச நேரத்தில், பெரியார் திருமணம் செய்து கொண்ட செய்தியும் உறுப்பினர்களுக்குத் தெரியவந்திருக்கிறது. உடனே அவர்கள் பெரியார் செயலைக் கண்டிக்கும் முறையில் ஓர் தீர் மானத்தை முக்கியமாக நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் கலைந்து விட்டார்கள். நிர்வாகக்கமிட்டி,யாருடைய திருமணம் தப்பானது என்று கருதிக் கூட்டப்பட்டதோ, அதே நபரை ஆதரித்து, மத்திய திராவிடர் கழகத் தலைவர் ஸ்ரீ வேதாசலம் கூட்டம் நடப்பதற்கு முதல் நாளன்று ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்.

இது ஜனநாயக ஒழுங்கு முறைகளுக்கும் ஸ்தாபன கட்டுப்பாடுகளுக்கும் முற்றும் எதிராகும்.

இக்கூட்டத்துக்குப் பிறகு ஸ்ரீ அண்ணாத்துரை (மத்திய திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர்) பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில், உடுமலைப் பேட்டை வழக்கில் பெரியார் சிறை சென்று விட்டால், அவர் வரும் வரை ஒருவித நடவடிக்கையிலும் ஈடு படக் கூடாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் பெரியார் இவ் வறிக்கைக்குப் பிறகும் கூட, கழகத்தோழர்களை-தன்னுடைய எதிரிகளை மிகக் கேவலமான முறையில் தாக்கி எழுதியிருக்கிறார். மேலும் கட்சிப் பத்திரிகையான 'விடுதலை' யை தன் சொந்தப்பத்திரிகை என்றும் எழுதி யிருக்கிறார்.

பெரியார்,திருமணத்தால் மட்டும் கொள்கைக்குப் புறம்பாய்ப் போனவரல்ல. வேறுபல சந்தர்ப்பங்களிலும் அவர் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டிருக்கிறார் என்பதை கழகத் தோழர்கள் மறந்து போயிருக்கலாம்; ஆனால் வரலாறு தெரிந்தவர்கள் மறந்து போயிருக்க மாட்டார்கள். உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறோம். பெரியார் சமதர்மக் கொள்கைகளை விட்டு விலகிப் போகிறார் என்று கூறி முன்பு பிரிந்து போன தோழர் ஜீவானந்தம் போன்றவர்களை 'அன்னக்காவடிகள்' என்று எழுதியிருப்பதும், அடிக்கடி கொள்கைகளில் திடீர் பல்டியடித்து வந்திருப்பதையும் விருப்பு, வெறுப்பில்லாமல் யோசிக்கும்படி நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். தன்னிடமுள்ள பணம், பத்திரிகை பலத்தால் யாரையும், எப்படி வேண்டுமானாலும் தாக்கி கேவலத்தையும், தப்புக் கருத்தையும் உண்டாக்கி விடலாம் என்று நினைக்கிற ஒருவரை கட்சித் தலைவராகக் கொண்டிருந்தது தங்கள் தப்பா? பெரியார் இராமசாமியின் பிழையா என்பதையும் கவனிக்க வேண்டும்.


## ருஷ்ய நாட்டு அழகி

இராதாமணாளன் தீட்டிய அரிய நூல்,

செந்தமிழ் சிரித்து விளையாடும் இனிய நடை—தேன் ஆறு போன்ற கதைப்போக்கு—இன்பமா, துன்பமா, வீரமா, எல்லா உணர்ச்சிகளும் பின்னிக்கிடந்து எழில் பரப்பும் சிறு கதைகள். மூன்று வர்ண அட்டை. அழகிய பதிப்பு.

விலை 0 8 0 தபாலில் 0 9 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

# காலிச் சட்டியில் அகப்பையைத் துழாவினால்....?

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த அறிக்கையிற் கையொப்பமிட்டிருக்கும் மூவரும் திருச்சி ஜில்லா நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் என்பது மட்டுமல்ல, மாகாண திராவிடர் கழகத் தலைமை நிர்வாகக் குழுவில், திருச்சி ஜில்லா திராவிடர் கழகத்தின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் சிறப்பும் பெருமையும் படைத்தவர்கள். அதாவது திருச்சி ஜில்லாவின் பிரதிநிதிகள். எனவே பொறுப்பும் தகுதியும் வாய்ந்தவர்கள். ஆகவே இவர்கள் அறிக்கையை யாரும் விஷமத்தனமானது என்றோ, அயோக்கியத்தனமானது என்றோ, பொறுப்பற்றது என்றோ கூறிவிட முடியாது.

இதோ மற்றொரு அறிக்கை! இது, **திருச்சி ஜில்லா திராவிடர் கழகச் செயலாளரின்** அறிக்கை.

படியுங்கள்:—

## திருச்சி மாவட்ட திராவிடர்கழகத் தலைவர்

# திரு. தி. பொ. வேதாச்சலம் அவர்களின் நேர்மையற்ற போக்கு.

31—7—49 தேதி பகல் 10-மணிக்கு தோழர் வேதாசலம் அவர்கள் தலைமையில் திருச்சி ஜில்லா திராவிடர்கழக கமிட்டி உறுப்பினர் கூட்டம் கூடி திருச்சி ஜில்லா திராவிடர் கழக 19-வது மாநாடு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது என்று வெளியூர் 5—8—49 விடுதலையில் வெளிவந்திருப்பது முற்றிலும் தவறான செய்தி.

**திருச்சி ஜில்லா திராவிடர்கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் என்று ஒன்று நடைபெறவேயில்லை.** கழகப் பணிகள் பற்றி பேசப்படும் என்ற அறிக்கையின் மீது கூடியிருந்த திருச்சி நகர திராவிடர்கழக உறுப்பினரும், (ஜில்லாக் கழக உறுப்பினர் அல்ல) உறுப்பினரல்லாதாரும் இருந்த கூட்டத்தில் பெருத்த எதிர்ப்புக்கும் குழப்பத்திற்கிடையேயும் செய்த எந்த தீர்மானமும் திருச்சி ஜில்லா திராவிடர்கழகத்தையோ, நிர்வாக உறுப்பினர்களையோ கட்டுப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் திரு. வேதாச்சலம் அவர்களின் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்து திருச்சி ஜில்லா உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

**விரைவில் ஜில்லா திராவிடர்கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் கூட்டப்படும்.** தேதி, இடம் பின்னர் அறிவிக்கப் படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

V. சீனிவாசன்,

5—8—49 **செயலாளன்:—** திருச்சி ஜில்லா திராவிடர் கழகம்.

இப்போது நீங்களே கூறுங்கள் தோழர்களே, ஜில்லாக் கமிட்டி கூடி எந்தவித முடிவும் செய்யாதிருக்கும் வேளையில், 20 பேர்கள் [illegible]ண்ட அந்தக்கமிட்டியில் உள்ளவர்கள். [illegible]பேர் மட்டும் தனியாகக்கூடி, 'தானடித்த மூப்பாக'க் கூட்டியிருக்கும் ஒரு பொதுக் கூட்டத்தை ஜில்லா மாநாடு என்று எழுதுவது நியாயமா, முறையா, ஜனநாயகமா, வேதாசலனாரைப் போன்ற ஒரு வழக்கறிஞர் செய்யக்கூடிய செயலா இது? சட்ட நுணுக்கங்களும் ஒழுங்குமுறையும் தெரிந்த, மாகாணத் திராவிடர் கழகத்தின் தலைவராக இருக்கும் ஒருவரா இப்படி சட்டப்படியும் மனித தர்மப்படியும் தவறான ஒரு பாதையில் செல்வது? அடுக்குமா இது?

அப்படித்தான் வேதாசலனாரும், ஜில்லாக் கமிட்டியைச் சேர்ந்த யாரோ ஒரு நான்கு பேரும் நிர்வாகக் கமிட்டியைக் கூட்டாமல், நிர்வாகக் கமிட்டியின் சம்மதம் பெறாமல், ஜில்லா மாநாடு என்ற பெயரை தவறான முறையில் பயன்படுத்தத்தொடங்கினார்களே, இதை, உண்மையையே உரைப்பதாகச் சொல்லிக் கொள்ளும் "விடுதலை", ஏன் கண்டித்திருக்கக் கூடாது? எப்போது பார்த்தாலும் கட்டுப்பாடு கட்டுப்பாடு என்றும், ஒழுங்குமுறை ஒழுங்குமுறை என்றும் பதிகம் பாடும் பெரியார், கட்டுப்பாட்டிற்கும் ஒழுங்குமுறைக்கும் முற்றிலும் முரணான இச் செயலை ஏன் வெறுத்து எழுதவில்லை?

கண்டிக்காததும் வெறுத்து எழுதாததும் மட்டுமா, நண்பர் வேதாசலத்தின் இம் முறைகேடான நடத்தைக்கு தாங்களும் உடந்தையாக இருக்கும் போக்கில் அல்லவா விடுதலையும் பெரியாரும் நடந்து கொண்டார்கள்?

தகுமா?

இதன் பெயர்தான் ஒழுங்குமுறையா?

ஒரு பெரியார் செய்யலாமா இது போல?

பெரியாருக்கும் விடுதலைக்கும் திருச்சியில் நடந்த உண்மை நிகழ்ச்சிகள் தெரியாது என்றும், நண்பர் வேதாசலமும் அவரைச் சேர்ந்த ஒரு நான்கு பேரும் கூட்டும் இம் "மாநாடு" உண்மையிலேயே நிர்வாகக் கமிட்டியின் சம்பந்தம் பெற்றதுதான் என்று விடுதலை நம்பிக்கொண்டிருக்கிறது என்றும், உண்மை மட்டும் தெரிந்திருக்குமானால், விடுதலை, இது போல நடந்துகொண்டிருக்காது என்றும் சிலர் கூறக் கூடும்.

ஆனால் அப்படிக்கூறுவதும் பொருந்தாது. ஏனெனில், நாம் மேலே வெளியிட்டிருக்கும் இரண்டு முக்கியமான அறிக்கைகளும் விடுதலைக்கு 6-8-49 அன்றே அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த அறிக்கைகளை பத்திரிகையில் வெளியிடும் அளவுக்கு "விடுதலை"க்கு நேர்மைப்பண்பு இல்லை என்றாலும், அந்த அறிக்கைகளைக் கண்ட பிறகேனும் இந்தப் பொதுக்கூட்டத்தை ஜில்லா மாநாடு என்பதாகத் திரித்துக் கூறும் திருப்பணியையே விட்டு விட்டிருக்கலாமே!

ஆனால் அப்படி அந்தத் திருப்பணியை விட்டு விடவில்லையே விடுதலை ஏடு! இன்று வரையும் அல்லவா திருச்சிக் கூட்டத்தை ஜில்லா மாநாடு என்று, வேண்டுமென்றே, அப்படிக் கூறுவது அடாது, தவறு, பொய் என்பதை நன்றாகத்தெரிந்து கொண்டே, எழுதி எழுதிப் பூரிப்படைகிறது விடுதலை! பொய்யைக் கூறுவதிலே ஒரு பூரிப்பும் அல்லவா கொள்கிறது நமது ஏடு நமது ஏடு என்று இதுவரை நயமாகவே களிப்புடன் ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து காப்பாற்றப்பட்டு வந்த "விடுதலை"!

(3-ம் பக்கம் பார்க்க)

# மயக்கமொழிகள் பலிக்கவில்லை! சாகச சக்தி ஜெயிக்கவில்லை!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"விடுதலை"யிலேயும் இந்த "மாநாட்"டுச் சேதி வருவதற்கு முன்னுள்வரை, தப்பித் தவறிக்கூட, ஒருமுறைகூட, அவர்களின் பெயர்கள் அடிபட்டதில்லை. சென்ற நான்கைந்து ஆண்டுகளாக, சுழலும் சூறவளி என சுற்றிச் சுற்றி, மலைவீழ் அருவியென சொற்களை உதிர்த்து, உதிர்த்து, மக்கட் பட்டாளத்தை இயக்கத்திற்குத் திரட்டித் திரட்டித் தந்து வந்த கழகப்பேச்சாளர்கள்-பிரமுகர்கள் கூட்டத்திலேநிழலுக்குகூட ஒதுங்கியவர்களல்ல இவர்கள்! இதுவரை நம் கழக சார்பிலே நடைபெற்றிருக்கும் எந்தப் பொதுக்கூட்டத்திலேயும் எந்த மாநாட்டிலேயும் இவர்களை, நாம், நாம் என்றால் திராவிடர் கழகத் தோழர்கள், கண்டதும் கிடையாது. கண்டதாக கேள்விப்பட்டதும் கிடையாது, ஒரு டி. பி. வேதாசலம், ஒரு எம். ஆர். ராதா, ஒரு சண்முகவேலாயுதம், ஒரு புலவர் மாணிக்கம் ஆகியோரைத் தவிர மற்றபடி இந்த "மாநாட்"டிலே "கலந்து கொண்டிருக்கும்" அத்தனை பேரும் நாட்டு மக்களுக்கு முன்பின் அறிமுகமாகாத புத்தம் புது முகங்கள் என்பதை யாருமே மறுக்க முடியாது.

அண்ணாதுரை வந்தாரா மாநாட்டிற்கு—இல்லை! அன்பழகன் உண்டா—கிடையாது! நெடுஞ்செழியன் பேசினரா—ஒருபோதும் இல்லை! E.V.K. சம்பத்—இல்லை. மு. கருணாநிதி, டி, கே. சீனிவாசன் சி. பி, சிற்றரசு, யாராவது வந்தார்களா!—கிடையாது, கிடையாது! ஏ. வி. பி. ஆசைத்தம்பி மேடையேறியிருந்தாரோ—இல்லை! என். வி. நடராசனைக் காண முடிந்ததா—இல்லை! கே. கே. நீலமேகம்—அவரும் இல்லை! சேலம் சித்தையன்—சென்னை C D T அரசு—தோழர் ஜீவரத்தினம்-எவரும் கிடையாது. இதுவரை கட்சியிலே ஈடுபட்டு அரும்பணியாற்றிவந்த முக்யஸ்தர்கள்ஒருவரைக்கூட இந்த "மாநாட்"டிலே காணமுடியவில்லை. திரு வெ. ரா. அவர்கள் தமிழகம் முழுவதையும் பூதக் கண்ணாடி கொண்டு துருவித் துருவிப் பார்த்தும்கூட, அவருக்கு ஆதரவாக, ஒரு எம. ஆர். ராதாவைத் தவிர, ஒரு டி, பி. வேதாசலத்தைத் தவிர, வேறு யாருமே கிடைக்கவில்லை! அதிலும் நண்பர் இராதா, திராவிடர் கழக அனுதாபி அல்லது ஆதரவாளரே தவிர, திராவிடர் கழக முக்யஸ்தர் அல்ல. நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன் அவர்கள் கழகக் கருத்துக்களைச் சுவைபட அமைத்து கிந்தனர் மூலமாகவும் பல படங்கள் மூலமாகவும் மூட நம்பிக்கைக் கோட்டைகளைத் தவிடுபொடியாக்கி வந்தபோதிலும், அவர் எப்படி அந்தக் காரணத்தாலேயே திராவிடர்கழக உறுப்பினரோ, பிரபலஸ்தரோ ஆகமாட்டாரோ, திராவிடர்கழகத்தின் முக்கிய கோட்பாடு ஆகிய திராவிடநாடுபிரிவினைத் தத்துவத்தை ஒப்புக்கொண்டபோதிலும் நாட்டிலே பிரபலஸ்தர்களாக இருந்தபோதிலும், அறிஞர் திரு. வி.க, டாக்டர் கிருஷ்ணசாமி, முன்னாள் அமைச்சர் முத்தையா முதலியவர்கள் திராவிடர் கழக உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால் எப்படி திராவிடர் கழக பிரபலஸ்தர்கள் ஆகமாட்டார்களோ அப்படித்தான் தோழர் இராதாவும் கழக அனுதாபியே தவிர, ஆதரவாளரே தவிர, கழக உறுப்பினர் அல்ல. மேலும், தோழர் இராதா அண்ணா அவர்களிடம் ஏற்கெனவே சில தனிப்பட்ட காரணங்களை முன்னிட்டு வெறுப்பும் துவேஷமும் கொண்டவர். இரண்டாண்டுகளுக்கு முன்னரே தூத்துக்குடி மாநாட்டின் போது, அண்ணா அவர்களை இனி எந்த மாநாட்டிற்கும் அழைக்கக்கூடாது என்று வாய்த் துடுக்காகப் பேசிவிட்டு, அந்தக் காரணத்தாலே, நடிகவேள் இராதா மாநாட்டில் நஞ்சு கலந்தார் என்று கழகத் தோழர்களால் கார சாரமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் கண்டிக்கப்படும் நிலைக்கு ஆளானவர். எனவே இப்படிப்பட்டவர்—எப்படிப்பட்ட நிலையிலும் அண்ணாவை எதிர்ப்பதிலே கண்ணும் கருத்துமாய் இருப்பவர், இப்போதும் அவரை எதிர்க்கவேண்டும் என்பதற்காக பெரியாரை ஆதரிப்பதாகப் பாவனை புரிவதிலே ஆச்சரியமில்லை.

ஆகவே வேதாசலனார்ஒருவரைத் தவிர, இந்த "மாநாட்"டிலே, திராவிடர் கழக முக்யஸ்தர்கள் வேறு யாரும் கலந்துகொள்ளவில்லை, கலந்துகொண்டிருக்கும் விஜயராகவலு-வீரய்யா-நடேசன்களையோ, நாட்டு மக்கள் முன்பின் கேள்விப்பட்டதில்லை.

பெரியார் தேடித் தேடிப் பார்த்திருக்கிறர்—கடிதங்களை வரைருக்கும் எழுதி எழுதிப் பார்த்திருக்கிறர்—நண்பர்கள் சிலரை பல ஊர்கட்கும் அனுப்பி யார் யாரையோ வலைவீசி இழுக்கச் செய்திருக்கிறர்—தூண்டில் முள்ளிலேஏதேதோ "ஆசை"களைச் செருகிவைத்து, கழகத் தோழர்களில் முக்யஸ்தர்களை எப்படி எப்படியோ தன் பக்கம் திருப்பப் பார்த்திருக்கிறர்—பற்பல மயக்க மொழிகளை ஊட்டியிருக்கிறர்—மேடை காலியாக இருக்கிறது, இப்போது மேடைமீது ஏறிஞல், நாலாந்தர ஆட்களுக்கும் முதல்தர இடம் கிடைக்கும் என்பதை சிலருக்கு குறிப்பாகவும் சிலருக்கு வெளிப்படையாகவும் எடுத்துச்சொல்லி வீரர்களாக்குவதாக ஆசை காட்டியிருக்கிறர்—அந்த ஆசையை ஊட்டுவதிலே, ஊட்டி ஆளை மயக்குவதிலே, மயக்கி தான் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கும் கிளிப்பிள்ளைகள் ஆக்குவதிலே அவருக்கு இணை அவர் தானே—ஆட்களை மயக்கி தன் வலையிலே விழச்செய்யும் சாகசத் திறமையிலே மான்விழி மாதர்கூட அவருடன் போட்டிபோட முடியாது என்பதுதான் அவருடன் நெருங்கிப் பழகிய அத்தனைபேரும் ஒருமுகமாக அவருக்குத் தந்திருக்கும் நற்சான்று இதழாயிற்றே—அந்தத்திறமையை, ஆற்றலை, சாகச சக்தியை பெரியார் இம்முறை முற்றிலும் கையாண்டிருக்கிறர்—அவருடைய ரதகஜ துரக பதாதிகளாக இருக்கும் "வேதாசலம்—குருசாமி—சண்முக வேலாயுதம்" படைவரிசையும் என்னென்னவோ "மாயாஜாலங்"களைக் கையாண்டு யார் யாரையோ மாநாட்டிற்கு அழைத்து வந்து விடவேண்டும் என்றுஎப்படிஎப்படியோமுயன்று பார்த்தது. இவ்வளவு பிரம்மாண்டமான முயற்சிகளின் விளைவுதான் சென்றகிழமை திருச்சியில் நடைபெற்றிருக்கும் பெரியார் ப... விழா—இல்லை இல்லை, உன்... வாய் தவறிச் சொல்...

# யானை வேட்டைக்குச் சென்றனர்! பூனை பிடித்துத் திரும்பினர்!

**"நண்பர்கள்" மன்னிக்கவேண்டும்—பெரியார் ஆதரிப்பு மாநாடு!**

எவ்வளவு பெரு முயற்சி செய்தனர்! இறுதியில் எவ்வளவு மகத்தானதோல்வி அடைந்தனர்! விலகிநிற்கும் தோழர்களில் யாரையாவது, ஒருவரையாவது, எப்படியாவது, இந்த "மாநாட்"டில் சேர்த்துக் காட்டிவிடவேண்டும் என்று என்னென்ன பாடுபட்டனர்! கடைசியில் எவ்வளவு தோல்வி அடைந்தனர்! பரிதாபம்! பரிதாபம்!!

யானை வேட்டைக்குப் போனவன் பூனை பிடித்துக்கொண்டு வீட்டிற்குவந்து முக்காடிட்டுக்கொண்டு அழுத கதையாக அல்லவா இந்த மாநாடு முடிந்திருக்கிறது!

மலையைத் தள்ளித் தகர்த்தெறிய முயன்ற பெரியார், பழமொழி கூறும் முறைபோல, இறுதியில், எலியைத்தானே பிடிக்கமுடிந்தது!!

"இராமவேடம் பூண்டவன் போய்விட்டானா—போகட்டும்! இராவண வேடம் பூண்டவன் போய்விட்டானா—அவனும் போகட்டும்! இலட்சுமணவேடம் பூண்டவனும் போய்விட்டானா—நன்று நன்று, போகட்டும்! சீதை வேடதாரியும் இல்லையா—மெத்தச்சரி! சம்பூர்ண இராமாயண நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த கம்பெனி நடிகர்கள் அத்தனைபேரும் நாடகமாடமறுத்துவிட்டு, என்போக்கு சர்வாதிகாரப் போக்கு என்று கூறிவிட்டு, ஒத்துழைக்க முடியாது என்று உரைத்துவிட்டு, வீட்டிற்குப் போய்விட்டார்களா—நல்லது, மிக நல்லது, மிக மிக நல்லது" என்று இறுமாப்புடன் கூறிவிட்டு, கம்பெனி முதலாளி, மனமொடிந்து ஒதுங்கியிருக்கும் ஒப்பற்ற நடிகமணிகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், அவர்கள் ஒதுங்கியிருப்பதாலேயே என் கம்பெனி நின்று போய்விடும்—நாடகம் நடவாமலா இருக்கும் என்று மீசை துடிக்கத் துடிக்க தலையை ஆட்டி ஆட்டிக் கோபத்துடன் கூறிவிட்டு, கண்களில் தீப்பொறி பறக்க, நாடக மண்டபத்துக்கு ஓடோடியும் சென்று, **அனுமார் வேடதாரி ஒருவரைத் தவிர விபீஷண வேடதாரி ஒருவரைத் தவிர**, மற்ற எல்லா [illegible]களும் போய் விட்டதைக் கண்டு, "யார் போனாலென்ன—யார் இருந்தாலென்ன? யார் விலகினால் என்ன—யார் விலகாவிட்டால் என்ன? யார் ஒத்துழைத்தால் என்ன—யார் ஒத்துழைக்காவிட்டால் என்ன—சம்பூர்ண இராமாயணம் நடந்தே தீரும்" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டே, பக்கத்தே கைகட்டி வாய்பொத்தி நிற்கும் "விபீஷண" ஆழ்வாரையும் "அனுமார்" அவர்களையும் பார்த்து, மணி ஆகிவிட்டதே—இன்னமுமா நாடகத்தை ஆரம்பிக்காமல் இருக்கிறீர்கள் அயோக்கியர்களே என்று கேட்க, அவர்கள், முக்கிய நடிக பாத்திரங்கள் அத்தனைபேரும் வெளியேறிவிட்டனரே—நாங்கள் என்செய்வோம்—நாடகத்தை எப்படித் தொடங்குவோம்—சிலர் போய், சிலர் இருந்தாலாவது நாடகத்தை எப்படியாவது ஒப்பேற்றி விடுவோம்—இப்போதோ ஒரு நடிகரும் இல்லையே—வெறும் விபீஷணரும் அனுமாரும் மட்டும் சோந்துவிட்டால் சம்பூர்ண இராமாயணம் எப்படி ஐயனே உருவாகும் என்று பணிவுடன் கேட்க, உடனே முதலாளி, கடுங்கோபத்துடன், "என் உப்பைத் தின்று உடலை வளர்த்துக்கொண்டு, என் பேச்சுக்கு மறுபேச்சு கூடவா பேசுகிறீர்கள்! நீங்கள் கம்பெனியில் சேர்ந்த அன்றே நான் நூறுதரம் சொல்லவில்லையா இந்தக் கம்பெனியில் சொந்தப் புத்தி உள்ளவர்களுக்குச் சிறிதும் இடமில்லை இடமில்லை என்று அதற்கு ஒப்புக்கொண்டுதானே உள்ளே நுழைந்தீர்கள்—இப்போது எந்த உரிமையில் என்னை மடக்கி தைரியமாக கேள்வியும் கேட்கிறீர்கள்?" என்று இடி இடித்ததுபோல் முழக்கமிட, "அது சரி ஐயனே, நாடகம் எப்படி நடக்கும் மற்ற வேடதாரிகள் அத்தனை பேரும் இல்லாமல்? இதற்குத் தேவரீர்தான் ஒரு வழி சொல்லியருளல் வேண்டும்" என்று விபீஷண—அனுமார் வேடதாரிகள்கேட்க, "இதோ வழிகூறுகிறேன் பார்—அற்புதமான வழி" என்று கூறியபடி, மடமடவென வெளியே சென்று நாடகம் பார்த்துப் பழக்கமானவர்களை தவிர நாடகம் ஆடுவது எப்படி என்பதைப்பற்றியோ, நாடகத்தில் என்ன பேசுவது என்பதைப் பற்றியோ, நடக்கப்போவது என்ன நாடகம் என்பதையோ துளியும் அறியாத தன் தோழர்கள் நான்கைந்து பேரை, அவர்கள் விருப்பத்திற்கு மாறாக, "எங்களுக்கென்ன தெரியும் நாடகமாட—எங்களை விட்டு விடுங்கள், தயவு செய்து விட்டுவிடுங்கள்!" என்று அவர்கள் கெஞ்சக் கெஞ்ச, அவர்கள் கெஞ்சுதலை காதிலே போட்டுக்கொள்ளாமலே கைபிடித்துக் கரகரவென இழுத்துக் கொண்டுவந்து, நாடக மேடையில், என்ன செய்வது—எப்படி நாடகத்தை நடத்த முடியும் என்பதை எண்ணி எண்ணித் தத்தளித்த வண்ணம் நின்று கொண்டிருக்கும் விபீஷண-அனுமார்வேடதாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு, இவர்களை வைத்துக் கொண்டு எப்படியும் நீங்கள் இன்று நாடகத்தை நடத்தித்தான் ஆகவேண்டும் என்று கூறிவிட்டு, முதலாளி, "நாடகம்" நடக்கும்போது நேரிலே இருந்தால், இதுவும் ஒரு நாடகமா என்று சொல்லிச் சொல்லி நாடகம் பார்க்க வந்திருக்கும் ரசிகர்கள் தன்னை ஏசுவார்களே என்பதை எண்ணி நாடக மண்டபத்தை விட்டகன்று, தன் மாளிகைக்குச் சென்று, உறங்கிக் கொண்டிருக்க, நடிப்பு என்றால் என்ன என்பதையே அறியாத—கதையையும் வசனங்களையும் உணராத-முதலாளியால் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட நண்பர்களைக் கொண்டு நாடகம் நடத்தப்பட்டால் அந்த நாடகம் எப்படி இருந்திருக்குமோ, எவ்வளவு கலைச் சுவையும் அறிவுச் சுவையும் பொருட் சுவையும் அந்த நாடகத்தில் ததும்புமோ, அதுபோலத்தான் இருந்திருக்கிறது இந்தத்திருச்சி "மாநாடு!" அந்த நாடகம் **போல** இருந்தது இந்த "மாநாடு" என்றுதான் கூறுகிறோமே தவிர, அந்த நாடகமேதான் இந்த "மாநாடு" என்று தவறாக எண்ணிக்கொண்டு, இந்த உவமானத்தில், வரிக்கு வரி, ஏதாவது உட் அர்த்தம் கற்பிக்க யாராவது முயன்றால், அந்த விஷம முயற்சிக்கு யாரும இடம் கொடுக்கக் கூடாது—அதற்கு நாம் பொறுப்

(4ம்-பக்கம் பார்க்க)

rinted and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
ters 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons